தினமலர்

**அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையில் ரூ.52 கோடிக்கு உற்பத்தி**

மே 28,2011,14:29



மதுரை : மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கடந்த 16.12.2010 அன்று கரும்பு அரவை தொடங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கரும்பு அரைத்ததில் 151 நாட்கள் வரை ஆலை இயங்கி உள்ளது. கடந்த 15.5.2011 அன்று அரவை சீசன் முடிந்தது. சர்க்கரை கட்டுமானம் 9.75 வரை கிடைத்துள்ளது. இந்த சீசனில் 1 லட்சத்து 84 ஆயிரத்து 553 டன் வரை கரும்பு அரைக்கப் பட்டுள்ளது. இதில் கள்ளக்குறிச்சி, செங்கல்வராயன், பெரம் பலூர் ஆலைகளில் இருந்து 25 ஆயிரம் டன் வரை இந்த ஆலைக்கு கரும்பு வரப் பெற்றதால்தான் நடப்பு வருட சீசனில் ஆலை தடங்கள் இல்லாமல் இயங்கியதற்கு காரண மாகும். தினமும் சுமார் 1500 டன் வரை கரும்பு அரைக்கப் பட்டுள்ளது. இந்த வருடம் 100 கிலோ கொண்ட சீனி மூடைகள் 1 லட்சத்து 79 ஆயிரத்து 270 வரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1 டன் கரும்பு ரூ.1900-க்கு கொள்முதல் செய்யப் பட்டது. சர்க்கரை கட்டு மானத்தையொட்டி டன்னுக்கு ரூ.45 வரை கூடுவதற்கு வாய்ப்பு உள்ளது. இதுபோக அரசு நிர்ணயிக்கும் தொகையிலானும் வரை உயர வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது.

**வேளாண் இணை இயக்குனர் தகவல் 7,500 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு**

பதிவு செய்த நாள் : மே 28,2011,00:31 IST

திருச்சி: ""நடப்பாண்டு 7,500 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கு போதிய உரங்கள் வட்டார வேளாண் மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது," என வேளாண் இணை இயக்குனர் சேகர் பேசினார்.
திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வேளாண் இணை இயக்குனர் சேகர் பேசியதாவது: தஞ்சாவூர், கல்லணையில் பராமரிப்பு பணிகள் நடப்பதால், மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 6ம் தேதி திறக்க வேண்டிய தண்ணீர் 10ம் தேதி திறக்கப்பட உள்ளது. நடப்பாண்டு 7,500 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அரசு மூலம் 64 மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகள் வழங்கப்பட வேண்டும். குறுவைப் பட்டத்துக்கு ஏற்ற அதிக விளைச்சல் தரக்கூடிய குறுகிய கால நெல் ரகங்களான ஏடிடி-36, ஏடிடி-43 ரகங்களின் சான்று பெற்ற விதைகள் 80 மெ.ட., இருப்பு வைக்கப்பட்டு, இதுவரை 18 மெ.ட., விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது 62 மெ.ட., மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டார வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விதைகளுக்கு ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கிலோ ஒன்றுக்கு 5 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. தனியார் விதை விற்பனை மையங்களில் குறுவை ரக விதைகள் 330 மெ.ட., இருப்பு உள்ளது. குறுவைப் பட்டத்துக்கு தேவையான இதர இடுபொருட்களான உயிர் உரங்கள் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா ஆகியவை போதுமான அளவு அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

குறுவையில் இரட்டிப்பு மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி முறையில் 4,000 ஹெக்டேரில் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. குறுவை பட்டத்துக்கு தேவையான யூரியா 10 ஆயிரத்து 110 மெ.ட., டி.ஏ.பி., 2,560 மெ.ட., பொட்டாஷ் 3,716 மெ.ட., கூட்டு உரங்கள் 4,214 மெ.ட.,ன்னும் மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக் கடைகளிலும் போதிய அளவு இருப்பு உள்ளது. எண்டோசல்ஃபான் பூச்சி மருந்து உச்ச நீதிமன்றத்தால் 2011 ஏப்ரல் 13 முதல் 8 வாரங்களுக்கு உற்பத்தி மற்றும் விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, பூச்சி மருந்து உற்பத்தியாளர் மற்றும் விற்பனையாளர் 8 வாரங்களுக்கு எண்டோசல்ஃபான் பூச்சி மருந்தை உற்பத்தி மற்றும் விற்பனை செய்யக்கூடாது. தடையை மீறி விற்பனை செய்பவர்களை பற்றி அருகிலுள்ள வட்டார வேளாண் உதவி இயக்குனர்களுக்கு தெரிவிக்க வேண்டும். விவரங்களுக்கு தங்கள் பகுதியில் உள்ள வட்டார வேளாண் உதவி இயக்குனர்கள், வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தை அணுகவும். இவ்வாறு அவர் பேசினார்.

**சிம்ஸ் பூங்காவில் நாளை பழ கண்காட்சி**

பதிவு செய்த நாள் : மே 28,2011,02:56 IST

குன்னூர்:குன்னூர் சிம்ஸ்பூங்காவில் நாளை துவங்கவுள்ள பழ கண்காட்சியில் 53 வகை பழங்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.நீலகிரியில் நடந்து வரும் கோடை விழாவின் இறுதி நிகழ்ச்சியாக, குன்னூர் சிம்ஸ்பூங்காவில் பழ கண்காட்சி நாளை துவங்குகிறது. 53ம் ஆண்டாக நடக்கும் இந்த கண்காட்சியில், 53 வகை பழங்கள், மாநிலத்தின் பல இடங்களில் இருந்தும் வரவழைக்கப்படவுள்ளன. பூங்காவின் முகப்பில் மா, பலா, வாழை என முக்கனிகள் மூலம் அலங்கார வளைவு அமைக்கப்படவுள்ளது.நீலகிரி மலை ரயிலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நோக்கில் 15 ஆயிரம் சாத்துக்குடி பழங்களை கொண்டு, 35 அடி நீளம், 13 அடி உயரம், 15 அடி அகலத்தில் பழமை வாய்ந்த குன்னூர் ரயில் நிலையத்தின் தோற்றம் அமைக்கப்படுகிறது. பழங்களை கொண்டு தயாரிக்கப்படும் ஜாம், ஜெல்லி, ஊறுகாய் போன்றவையும் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. பூங்காவில் உள்ள அரிய வகை மரங்களின் தகவல் அடங்கிய துண்டு பிரசுரம் சுற்றுலா பயணிகளுக்கு வினியோகம் செய்யப்படவுள்ளது.மரங்களின் விதைகள், பூங்காவில் உள்ள பண்ணையில் விற்கப்படுகின்றன. நுழைவு கட்டணமாக பெரியவர்களுக்கு 20 ரூபாய், சிறியவர்களுக்கு 10, கேமராவுக்கு 30, வீடியோக கேமராவுக்கு 75 ரூபாய் வசூலிக்கப்படவுள்து. பணிகளை குன்னூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் மணி உட்பட ஊழியர்கள் செய்துள்ளனர்.

**தேயிலை கொள்முதல் நாட்கள் மாற்றி அமைப்பு**

பதிவு செய்த நாள் : மே 28,2011,02:54 IST

மஞ்சூர்:மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் வரும் 1ம் தேதி முதல் பசுந்தேயிலைக்கான கொள்முதல் நாட்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் 2 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். கடந்த சில மாதங்களாக பரவலாக பெய்த மழையால் பசுந்தேயிலை வரத்து அதிகரித்துள்ளது. தற்போது நாளொன்றுக்கு 30 ஆயிரத்திற்கு மேல் பசுந்தேயிலை கொள்முதல் செய்யப்படுகிறது. வரத்து அதிகரித்த காரணத்தினால் வார நாட்களில் அவ்வப்போது விடுமுறையும் அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளாக கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் கூலி குறைவு காரணமாக தொழிலாளர்கள் வேலைக்கு வர மறுப்பதால் தொழிலாளர்கள் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் ஏற்பட்டுள்ள நிர்வாக சிக்கல் காரணமாக கொள்முதல் செய்யும் வார நாட்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி மஞ்சூர், மணிக்கல், பாக்கோரை, குந்தா, தூனேரி,

மட்டக்கண்டி, கீழ்குந்தா, ஓணிக்கண்டி, மந்து, கண்டிஒலா உள்ளிட்ட கொள்முதல் மையங்களில் வாரத்தில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாட்கள் கொள்முதல் செய்யப்படுகிறது. கரியமலை, முள்ளிமலை, தொட்டக்கம்பை, காந்திபுரம், மேல்குந்தா, கோலிஹட்டி, தாய்சோலை ஆகிய மையங்களில் வாரத்தில் புதன், வெள்ளி, ஞாயிறு ஆகிய நாட்கள் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த நடைமுறை வரும் ஜூன் 1ம் தேதி முதல் கடைப்பிடிக்கப்படுவதாகவும், இதற்கான சுற்றறிக்கை தொழிற்சாலை நிர்வாக சார்பில் அனைத்து பசுந்தேயிலை கொள்முதல் மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கத்தினர்கள் இந்த நடைமுறைக்கு ஒத்துழைப்பு தருமாறு மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை நிர்வாகம் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**ராமநாதபுரத்தில் இயற்கை உரத்துக்கு தட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : மே 28,2011,22:34 IST

ராமநாதபுரம் : இயற்கை உரத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், செயற்கை உரங்களையே விவசாயத்துக்கு பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் விவசாயிகள் உள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. நெல்லுக்கு செயற்கை உரத்தை விட இயற்கை உரமே சிறந்தது. இதற்காக முன்பு மரங்களின் இலைகள், பசுஞ்சாணம் முதலியவற்றையே உரமாக இட்டு வந்தனர். இதனால் பயிர் விளைச்சல் நன்றாக இருந்தது. நாளடைவில் கால்நடைகள் வளர்ப்பின்மை, மரங்கள் வெட்டப்பட்டு வீடுகள் பெருகியதால், இவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் செயற்கை உரங்களையே பயன்படுத்த வேண்டிய அவலத்துக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.ஆனாலும் இயற்கை உரம் கொஞ்சமாவது தேவை என்ற நிலைப்பாடு உள்ளது. ஒரு ஏக்கருக்கு குறைந்த பட்சம் நான்கு டன் இயற்கை உரம் தேவை. ஆனால் அவ்வளவு உரம் கிடைப்பதில்லை.வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன் கூறியதாவது: இயற்கை உரம் தட்டுப்பாடு எல்லா இடத்திலும் உள்ளது. மாவட்டத்தை பொறுத்தவரை மானாவாரி விவசாயம் நடப்பதால், மரங்களின் இலைகளை போட்டு விவசாயம் செய்ய முடியாது. ஒரு ஏக்கர் நிலத்துக்கு தேவையான இயற்கை உரம் கிடைப்பதில்லை. எனவே 300 கிலோ தொழு உரத்துடன் (பசுஞ்சாணம்) 62.5 கிலோ சூப்பர் பாஸ்பேட் சேர்த்து தண்ணீர் ஊற்றி 30 நாட்கள் ஊற வைத்தால் அவை நான்கு டன் அளவுக்கு ஊட்டமேற்றிய உரமாக மாறுகிறது. இந்த செய்முறை குறித்து விவசாயிகளிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது, என்றார்.

**ஆடுகள் விலை உயர்வால் அதிகரிக்கும் ஆடு வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : மே 28,2011,22:34 IST

கீழக்கரை : கீழக்கரை, ஏர்வாடி பகுதியில் உள்ள கடலோர கிராமப்புற மக்கள் விவசாயம் மற்றும் மீன்பிடி தொழிலை பிரதான தொழிலாக செய்து வந்தனர். ஆடுகளின் விலை உயர்வால் கடலோர கிராமங்களில் உள்ள மக்கள் கூடுதல் தொழிலாக ஆடு வளர்க்கும் தொழிலை செய்து வருகின்றனர். இதில் வருவாய் அதிகமாக கிடைப்பதால் தற்போது பலரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பண்டிகை நாட்களில் மட்டும் இறைச்சி தேவை அதிகரித்து வந்தது. தற்போது வாரத்தில் ஒருநாள் இறைச்சியை உணவாக சேர்த்துக்கொள்ளும் முறையை ஏராளமானோர் கடைபிடிப்பதால் தேவை அதிகரித்துள்ளது. ஆடுகள் விலை உயர்ந்து இறைச்சி விலையும் எகிறியுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன் கிலோ இறைச்சி 240 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் தற்போது 310 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஏர்வாடி தனசேகரன் கூறியதாவது; கடந்தாண்டு வரை குறிப்பிட்ட சமூக மக்கள் ஆடு வளர்ப்பு தொழிலை செய்து வந்தனர். இதில் வருவாய் அதிகமாக கிடைப்பதை அறிந்த பலரும் வீடுகள் தோறும் ஆடுகளை வளர்த்து வளர்கின்றனர். அதிகமான ஆடுகள் இருந்தாலும் தேவை அதிகரிப்பால் விலை குறைவதற்கான வாய்ப்பு கிடையாது, என்றார்.

**பாமாயில், கடலை பருப்பு உயர்வு மிளகாய் வத்தல் விலையும் உயரலாம்**

பதிவு செய்த நாள் : மே 28,2011,22:50 IST

விருதுநகர் : விருதுநகர் மார்க்கெட்டில் பாமாயில், கொண்டைக்கடலை, பொரிகடலை, நிலக்கடலை பருப்பு, புண்ணாக்கு விலை உயர்ந்துள்ள நிலையில், மிளகாய் வத்தல் வரத்து குறைவால் விலை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. விருதுநகர் மார்க்கெட்டில் சர்க்கரை விலை மூடைக்கு 2795 லிருந்து 2785 ரூபாயாக குறைந்துள்ளது. கடலெண்ணெய் டின்னுக்கு 1350 லிருந்து 1380,ரூபாயாகவும், சூரிய காந்தி எண்ணெய் 1170, பாமாயில் 910 லிருந்து 950 ஆகவும், நிலக்கடலைப் பருப்பு 4100 லிருந்து 4,300 , கடலைப் புண்ணாக்கு மூடை 2800 லிருந்து 3000 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. உளுந்து விலை மூடைக்கு 4900 லிருந்து 4800 , சுமார் ரக உளுந்து 4100 லிருந்து 4900, பர்மா பருவட்டு உளுந்து 5100 லிருந்து 4900 ரூபாயாக உள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 6400 , பர்மா பருவட்டு பருப்பு 6200 ரூபாயாகவுள்ளது. துவரை 3800 லிருந்து 3600 , பொடி துவரை 3000 லிருந்து 2800 ஆக குறைந்துள்ளது. துவரம் பருப்பு 5700, பொடி துவரம் பருப்பு 4600 ரூபாயாக உள்ளது. பாசிப்பயறு 6400, லயன் பருவட்டு 3900 ,சுமார் ரகம் 3700 ரூபாயாகவும் உள்ளது. பாசிப்பருப்பு 5700, சுமார் ரகம் 5500 ரூபாயாக உள்ளது. மைதா 2180 ,ரவை 2140 லிருந்து 2170 ஆக உயர்ந்துள்ளது. கொண்டைக்கடலை 2700, பொரிகடலை

2080 ரூபாயாக உள்ளது. மிளகாய் புது வத்தல் 8400, சுமார் ரகம் 7500 லிருந்து 8000, முண்டு வத்தல் 7000 லிருந்து 7500 ஆக உள்ளது. சோடை வத்தல் 3200, பழைய சோடை வத்தல் 2400 ரூபாயாகவும் உள்ளது. "மிளகாய் வத்தல் வரத்து குறைந்துள்ளதாலும், கோடையை முன்னிட்டு ஆந்திர மிளகாய் மார்க்கெட் மூடப்பட்டிருப்பதாலும் வத்தல் விலை தொடர்ந்து உயர வாய்ப்புள்ளதாக,' வியாபாரிகள் தெரிவித்தனர்.

**கார் பருவ சாகுபடிக்கு மணிமுத்தாறு அணை திறப்பு**

பதிவு செய்த நாள் : மே 28,2011,02:03 IST

அம்பாசமுத்திரம் : மணிமுத்தாறு அணையிலிருந்து கார் பருவ சாகுபடிக்கு நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது.
மணிமுத்தாறு அணையிலிருந்து கார் பருவ சாகுபடிக்காக பெருங்கால் கால்வாயில் தண்ணீர் திறந்து விட வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, முதல்வர் ஜெயலலிதா 27ம் தேதியிலிருந்து தொடர்ந்து 105 நாட்களுக்கு இக்கால்வாயில் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டார். இதனையடுத்து மணிமுத்தாறு பெருங்கால் கால்வாயில் நேற்று தண்ணீர் திறந்து விடப்பட்டது.கலெக்டர் ஜெயராமன் நேற்று காலை 10 மணிக்கு பெருங்கால் மதகை இயக்கி தண்ணீரை திறந்து விட்டார். சேரன்மகாதேவி ஆர்.டி.ஓ., கருணாகரன், தாமிரபரணி வடிநில கோட்ட செயற் பொறியாளர் காமராஜ், உதவி செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன், உதவி பொறியாளர் மாய முருகன், தாசில்தார் சுப்பிரமணியன், வேளாண்மை உதவி இயக்குனர்கள் மகாலிங்கம், ஜெயசெல்வின் இன்பராஜ் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ஏப்ரல் மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி 13 சதவீதம் குறைந்தது



ஜெயஸ்ரீ போஸ்லே

பூனா

ஏப்ரல் மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி 13 சதவீதம் குறைந்து 1.51 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 1.73 லட்சம் டன்னாக இருந்தது. ஏற்றுமதி செய்வதற்கான குறைந்தபட்ச விலை அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதே இதற்கு காரணம் என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.
கடந்த டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் வெங்காயத்தின் விலை விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்தது. சில இடங்களில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.100 என்ற அளவையும் எட்டியது. பின்னர் அரசு எடுத்த நடவடிக்கைகளால் இறக்குமதி அதிகரித்தது. ரபி பருவ உற்பத்தியும் உயர்ந்தது. இதனால் வெங்காயம் விலை படிப்படியாக குறைய தொடங்கியது.

தற்போது மொத்த விற்பனையில் ஒரு கிலோ வெங்காயம் விலை ரூ.5–ஆக உள்ளது. ஒரு கிலோவிற்கான உற்பத்தி செலவினம் ரூ.3 என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் இந்த விலை நியாயமானது என கருதப்படுகிறது. எனினும் மேலும் கூடுதல் விலையை எதிர்நோக்கி விவசாயிகள் வெங்காயத்தை இருப்பு வைத்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தினகரன்

**விவசாய கடனுக்கு 4% மானியம்**

பதிவு செய்த நாள் 5/28/2011 1:05:20 AM



புதுடெல்லி : விவசாய கடன் வட்டிக்கான மானியத்தை 4 சதவீதமாக அதிகரிக்க வலியுறுத்தியுள்ளதாக உணவு, நுகர்வோர் பாதுகாப்பு துறை அமைச்சர் தாமஸ் தெரிவித்துள்ளார். விவசாயிகள் பல்வேறு பயிர்களை விளைவிக்க வங்கியில் பயிர்க்கடன் வாங்குகின்றனர். அறுவடைக்குபின் விவசாயிகள் அந்த கடனை அடைப்பர். இந்த கடனுக்கான வட்டி 11 சதவீதமாக நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு வாங்கப்படும் கடன் வட்டிக்கு அரசு மானியம் வழங்குகிறது. விவசாயிகளின் நலன் கருதி வட்டி மானியத்தை 4 சதவீதமாக அதிகரிக்க மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியிடம் கோரிக்கை மனு கொடுத்து இருப்பதாக தாமஸ் தெரிவித்தார்.